**OS.No. 321/2021**

**PW1 –கவிதா**

**க/பெ.சுப்பிரமணியன்**

**நாள். 29.01.2025.**

**வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தில் எனக்கு பங்கு வேண்டும் என்றுதான் வழங்க தாக்கல் செய்திருக்கிறேன் .நான் பன்னிரண்டாம் வகுப்பு படித்திருக்கிறேன் .என் குடும்பத்தாரின் எதிர்ப்பை நான் திருமணம் செய்து கொண்டேன். அது காதல் திருமணம் .என் அப்பாவின் இளைய மகள் நான். 2,3 பிரதிவாதிகள் என் மூத்த சகோதரிகள். எனக்கு திருமணம் 2009 ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது முதல் என் பெற்றோர்கள் என்னுடன் சமூக உறவில் இல்லை என்றால் சரிதான்

2. Schedule B and C ல் உள்ள சொத்துக்கள் என் அம்மா பெயரில் இருக்கும் சொத்துக்கள் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை .என் அப்பா பெயரில் இருக்கும் அனைத்து சொத்துக்களையும் இந்த வழக்கில் தாவா காட்டி இருக்கிறேன் ஏதும் விடப்படவில்லை .என்னிடம் காட்டப்படும் ஆவணம் பழனிசாமி என்பவர் பெயர்தான் இருக்கிறது அந்த ஆவணம் சாட்சியால் படித்துப் பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு பி.வா.சாஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்துக்களை இந்த வழக்கில் தாவா சொத்துக்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. என் அம்மா பெயரில் இருக்கும் சொத்துக்கள் அனைத்தும் மீதும் வழக்கு போட்டு இருக்கிறேன் என்றும் என் அப்பா பெயரில் இருக்கும் சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றும் சொன்னால் தெரியாது .ஒன்னு ரெண்டு எது வழக்கு உரையை நான் படித்து பார்த்தேன் என்றால் பார்த்தேன் விவரங்கள் தெரிந்து கொண்டேன்.

4. தாவா சொத்து ஐட்டம் நம்பர் நாலு மற்றும் ஐந்து குறித்த என் அப்பா என்னுடைய சகோதரி பெயர் ஒரு உயில் ராமேஷ்வரி எழுதி வைத்திருக்கிறார் என்றாலும் இரண்டாம் பிரதிவாதி பெயரில் இருக்கும் உயில் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது .பிரதிவாதிகள் ஏற்கனவே அந்த உயிலை பற்றி அவர்களுடைய எதிர்வழக்குரையில் சொல்லி இருக்கிறார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது .எதிர்உரையில் இருக்கும் சங்கதிகளை மறுத்து பதில் உரை எல்லாம் தாக்கல் செய்யவில்லை .

5. என் அப்பாவின் இறப்பிற்கு பின்பு என் அப்பாவின் தனிப்பட்ட சொத்தை பொருத்து அவர் எழுதி வைத்த உயிலானது 16.5.2021 தேதிக்கு பின்பு நடைமுறைக்கு வந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல .என் அம்மா மற்றும் அப்பா கட்டிட வேலை பார்த்து வந்தார்கள் மண்பாண்டம் தயாரித்து கொண்டு இருந்தார்கள். அதன் மூலம் தான் சம்பாதித்தார்கள் என்றாலும் ஆமாம் .

6. பகுதி பாகப்பிரிவினை மட்டும் கேட்டு இருக்கும் காரணத்தினால் இந்த வழக்கு நிலை என்று சொன்னால் சரியல்ல .என் அப்பாவின் பெயரில் இருக்கும் சொத்தை என் அப்பா 3 ஆம் பிரதிவாதிக்கு ஒரு உயில் எழுதி வைத்துவிட்டார்

என்றும் அதனால் தான் அந்த சொத்தை வேண்டுமென்று இந்த தாவாவில் சேர்க்கவில்லை என்றும் சொன்னால் என் அக்கா அந்த உயில் பற்றி என்னிடம் எல்லாம் சொல்லவில்லை .உயில்களைப் பற்றி எனக்கு நன்றாக தெரிந்திருந்தும் வேண்டும் என்று அவற்றை விட்டுவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல .எப்போதும் நான் தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருக்கவில்லை என்றும் நான் வெளியூரில் தான் குடியிருந்து வந்தேன் என்றும் சொன்னால் சரி அல்ல என் அப்பா வீட்டிற்கு போய் வந்து கொண்டுதான் இருந்தேன் .

7. தாவாவில் நான் சொல்லி இருக்கும் முகவரி போலியானது என்று சொன்னால் சரியல்ல அதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல .இந்த தாவா ஒரு சொத்தை நீக்கலாக நான் தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல .

**மறுவிசாரணைஇல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.